விலை: சதம் 75

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 12 | றம்ழான் 24 | இதழ் 163
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 27-7-1981

இலெக்றிக்கல்
கேபிள்ஸ்
எல்லாவகையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்
ரூ. 5000/-க்கு மேற்பட்ட கொள்வனவுக்கு
10% கழிவு கொடுக்கப்படும்.
கணநாத் இன்டஸ்றீஸ்
பெருமாள் கோவிலடி
464, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
0441

## கம்பர்மலைக்கிராமத்தில் நள்ளிரவில் நிகழ்ந்த பயங்கரம்!

# துப்பாக்கிச் சூட்டுக்கு 6 பேர் பலி!

### அறுவரை பொலிசார் நேடுகின்றனர்

(நமது நிருபர்
எஸ். திருச்செல்வம்)

உடுப்பிட்டித்தொகுதியிலுள்ள கம்பர்மலை என்னும் கிராமத்தில் நேற்று முன் தினம் நள்ளிரவு நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மூன்று பெண்கள் உட்பட ஆறுபேர் பலியானார்கள்! படுகாயமடைந்த ஒரு இளம் பெண் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஆறு சந்தேகநபர்களைக் கைதுசெய்யுமாறு, மரண விசாரணை நடத்தியபருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் 'வாரண்ட்' பிறப்பித்துள்ளார்.

இச்சம்பவத்தில் என். கருணேஸ்வரன், என். அழகம்மா, என். கே. அழகம்மா, என். சாந்தேஸ்வரன், ஜெயநாயகவதி, வீ. யோகானந்தன் ஆகியோர் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார்கள். படுகாயமடைந்த செல்வி காஞ்சனதேவி நாராயணசாமி மந்திகை ஆஸ்பத்திரில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சந்தேகநபர்களான சின்னத்துரை அப்புத்துரை, இராசதுரை சிவராசா, இராசதுரை தேவராசா, வேலுப்பிள்ளை மகேந்திரன், சின்னையா தில்லை நடராசா, இராசதுரை தங்கராசா ஆகியோரைக் கைது செய்யுமாறு பருத்தித்துறை நீதவான் வாரண்ட்பிறப்பித்து வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உடுப்பிட்டித்தொகுதியைச் சேர்ந்த கம்பர்மலை கிராமத்தில் அத்தியடி குறிச்சியில் கந்தையா நாராயணசாமி என்பவரின் வீட்டுப்பகுதியில் இத்துப்பாக்கி சூட்டுச்சம்பவம் நடந்துள்ளது.

பருத்தித்துறை நீதவான்
[6ம் பக்கம் பார்க்க]

### எழுதுமட்டுவாள் சம்பவம்:

## அமைதியை ஏற்படுத்த அ. சபை நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

எழுதுமட்டுவாளில், கடந்த சில தினங்களாக நிலவிவரும் பதட்ட நிலையைத் தணித்து, இரு சாராரும் ஒற்றுமையாக வாழக்கூடிய முயற்சிகளை யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ளது,

எழுதுமட்டுவாளில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் சமூக ரீதியான கலவரங்களை அமைதிப்படுத்தி அப்பகுதியில் சுமுகமான வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று நேற்றுக் கூடிய யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நல்லூர் எம். பி.யின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகித்தார். எழுதுமட்டுவாள் சம்பவம் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், மாவட்டஅபிவிருத்திசபை உறுப்பினர்களான திரு. ந. இராசேந்திரம், திரு. சி. நாகராசா, திரு. ஆ. நடராசா, திரு. சு நடேசு ஆகியோர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

### சாள்ஸ்-டயானா திருமணம்

லண்டன், ஜூலை,26

இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் திருமண வைபவமாக இடம்பெறப்போகும் இளவரசர் சாள்ஸ் - டயானா திருமணத்தில் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கலந்து கொள்வார்கள்.

புதன்கிழமை நடைபெறவிருக்கும் இத்திருமண வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு ஏற்கனவே 2,600 விசேட பிரதிநிதிகள் லண்டன் வந்துள்ளனர். இவர்களில் ஒன்பது மன்னர்களும் ஒரு அரசகோமகனும் உள்ளனர்.

சாள்ஸ்-டயானா தம்பதிகளுக்கு இந்திய ராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி 18,000 ரூபா பெறுமதியான காஷ்மீர் கம்பளத்தைப் பரிசளிப்பார், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன 23,000 ரூபா பெறுமதியான வெள்ளித்தாம்பளம்-பேழையை பரிசளிப்பார்.

### பொதுமக்களுக்கும் அனுமதி

[யாழ்ப்பாணம்]

யாழ். ரயில் நிலையத்தின் மேல் மாடியில் உள்ள பிரயாணிகள் தங்கும் விடுதி இப்போது பொதுமக்களும் வாடகைக்குப் பெறக்கூடியவாறு ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதாக யாழ் ரயில்நிலைய பிரதம அதிபர் தெரிவித்துள்ளார். [இ]

# "அப்புத்துரை சுட்டதும் எனது மனைவி விழுந்தார்

## சந்தேகநபர்களுக்கும் எங்களுக்கும் பழைய கோபம் - வழக்கு உண்டு"

### நாராயணசாமி சாட்சியம்

[புலோலி]

"சம்பவதினம் இரவு நாங்கள் படுத்திருந்தபோது என் மகன் படுத்திருந்த ரோஜினி என் மகள் அம்மாவின் வீட்டுக்குப்பக்கத்தில் வெடிச்சத்தம் கேட்டது. என் மகள் காஞ்சனாதேவி வெடிச்சத்தம் கேட்பதாக என்னை எழுப்பினாள். அப்போது வீட்டுப் படலையில் மீண்டும் வெடிச்சத்தம் கேட்டது. தகரப்படலை விழுந்தது. அப்போது அப்புத்துரை சிவராசா, தேவராசா ஆகியோர் துவக்குடன் வீட்டிற்குள் புகுந்தார்கள். அப்புத்துரை என் மனைவியை ஒருதரம் சுட்டதும் அவர் விழுந்தார்.

கம்பர்மலை துப்பாக்கிச்சூட்டில் பலியான 6 பேர்களின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த கந்தையா நாராயணசாமி [60 வயது] மேற்கண்டவாறு கூறினார்.

[6-ம் பக்கம் பார்க்க]

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ உத்தரவாதம்
உங்கள் முதலீட்டிற்குப் பாதுகாப்பும் ஆகக்கூடுதலான வட்டியும் வழங்கும் நிறுவனம்
முதலீட்ட நாள் தொடக்கம் 30% மாதாந்தம் வட்டி வழங்குகின்றோம்
"மீளப்பெறுதல்"
நீங்கள் விரும்பும் நேரத்தில் வட்டியைப் பாதிக்காத வகையில் மீளப்பெறலாம்!
டிரான்ஸ்லங்கா இன்வெஸ்ற்மென்ட்ஸ் லிமிடெட்
77 1/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 7027
[மத்திய வங்கி நாணய சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்]
பிரதி சனிக்கிழமையும் பிற்பகல் 4 மணி முதல் 4-30 மணிவரை
"இரைதேடும் பறவைகள்" என்னும் நாடகத்தைக்கேட்கத் தவறாதீர்கள்

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

20 பரப்பு நெற் காணி தும்பளை வட்டுக்கோட்டையில் விற்பனைக்குண்டு. இராமநாதன், மே/பா தபாலதிபர், வட்டுக்கோட்டை. 0434

மானிப்பாய் சுகாதார கந்தோருக்கு அருகாமையில் பலன் தரும் தென்னம்பிள்ளைகளுடன் கூடிய தரமான இரண்டு பரப்பு வீடு வளவு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: V. K. மகாலிங்கம், C/O நாதன், நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 7540 0444

அச்சுவேலி தொழிற் பேட்டைக்கு அண்மையில் தோட்டம் செய்யவும், வீடு கட்டவும் தக்க 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி அருச்சுண சட்டத்தரணி, பருத்தித்துறை. 0443

1978 மொடல் புதிய யாவா (Jawa) 350 மோட்டார் சைக்கிள் நீதியான விலையில் விற்பனைக்குண்டு. முல்லைத்தீவு மாவட்ட வர்த்தக சம்மேளனம், தண்ணீரூற்று, முள்ளியவளை. 0413

## கல்வி

மின்சார வேலைகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் விரைவில் கற்க Jaffna Technical School (பதிவு 1956 - ம் ஆண்டு) 53 (30) டேவிட் றோட் குருநகர் யாழ்ப்பாணம். 0433

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பொலிகண்டியைச் சேர்ந்த கதிரவேலு வேலும் மயிலும் மரணசாதனமில்லாத ஆதனத்தின் விடயத்தில்.

இறந்தவர்

வேலும் மயிலும் கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை பொலிகண்டி.

மனுதாரர்

எதிராக

தத்துவ நியாயாதிக்கம் இல. 1117/T

1. சின்னத்தம்பி கப்பிரமணியம் கந்தசாமி
2. பெண் நயமணி தேவி இருவரும் பொலிகண்டி.

எதிர் மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11-ம் நாளன்று முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

(ஒப்பம்)

க. செல்வராசா
பதிவாளர்.

வரைவு
(ஒப்பம்)
வ. செல்லையா
மனுதாரின் சட்டத்தரணி

0408

## தேவை

இனிப்பு வியாபாரத்தில் அனுபவம் உடைய விற்பனையாளர்கள் தேவை. விபரங்கட்கு உடன் நேரில் வரவும். டாக்டர் சொக்கலிங்கம் ஞானசேகரன் (பாடசாலை வீதி), கொண்டாவில் மேற்கு, கோண்டாவில். 0429

பிரபல்யமான ஸ்தாபனமொன்றிற்கு தச்சு வேலை தெரிந்தவர்கள் தேவை. உடன் நேரில் சமூகமளிக்கவும். இசா ரேசப்ஸ், 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0438

கொழும்பில் எமது பிரதிநிதியாக சேவையாற்ற - தங்குமிட வசதியுள்ள - ஒருவர் உடன் தேவை. நேரில் வரவும். சுந்தர் ரவல் சேர்விஸ், 125/4, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 0427

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்:

மரண சாதனமில்லாது மரணமெய்திய சுன்னாகம், உடுவில் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பாலசிங்கத்தின் மரணச் சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்

கிருஷ்ணபிள்ளை பாலசிங்கம் கைம்பெண் ஸ்ரீ ஜெயதேவி, "கிருஷ்ணபதி" மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்.

மனுதாரர்

மரணசாதனம்) நியாயாதிக்கம்) சி/100

எதிர்

1. பாலசிங்கம் ஜெயகண்ணன்
2. பாலசிங்கம் பால ஜெயந்தன் இருவரும் "கிருஷ்ணபதி" மானிப்பாய் வீதி, உடுவில்.

(பராயமடையாதவர்கள்)

3. மயில்வாகனம் விஜயரத்தினம், ஆசிரியர், நாவலி வடக்கு, மானிப்பாய்.

(1ம், 2ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்களாதலால் தங்கள் வழக்குக் காவலன் 3ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்)

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14ஆம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

1981 ஆம் ஆடி மாதம் 22 ஆம் நாள்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

க.வ. கணேசன்,
பதிவாளர்.

த. சோமசுந்தரம்,
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். 0418

# 'அமிர்' மீதான நம்பிக்கையில்லா பிரேரணை: பாராளுமன்ற உரைகள் யாவும் ஆங்கில நூல் வடிவில் வெளிவரும்

## 'அமிர்' தகவல்

(சுழிபுரம்)

"ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் என்மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்ததன் மூலம் எமது இயக்கம் மேலும் ஆதரவு பெற்றுள்ளது. இதனுடன் எமது இனம் அடையும் வாய்ப்பும் கிட்டியுள்ளது. உலக நாடுகள் நன்கு தெரிந்துகூடிய வாறும் இச்சம்பவம் அமைந்துள்ளது. தமிழ்பேசும் இனத்தினர் இங்கு எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதை யாவரும் நன்கு தெரிந்து கொள்ள இச்சம்பவம் ஒன்றே போதும்."

"இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பண்ணாகத்தில் நேற்று முன்தினம் ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"பாராளுமன்றத்தில் என்மீது பேசப்பட்ட பேச்சு யாவற்றையும் ஆங்கில மொழியில் நூல் உருவில் வெளியிட்டு உலக நாடுகள் பூராவும் பரப்பி, இந்த அரசின் செயலை நாம் யாவருக்கும் தெரியப்படுத்தவுள்ளோம்.

எதிர்வரும் வரவுசெலவுத் திட்டம் ஓர் நெருக்கடியான திட்டமாக வுள்ளது பல மாற்றங்கள், பல பற்றாக்குறைகள் இடம்பெறவுள்ளன. இதிலிருந்து திசைதிருப்புவதற்காகவும், இலங்கா சுதந்திரக்கட்சியின் பிரசாரத்தை முறியடிக்கவுமே இந்த அரசு இவ்வாறு செயலில் ஈடுபட்டுள்ளது. இதனால் எனக்கு எவ்வித நட்டமும் இல்லை. ஆனால் எனது இனத்திற்கு ஓர் விடிவு ஏற்படும்" என்றார். [redacted]

பெருந் தொகையானவர்கள் அமிரின் பேச்சைக் கேட்டனர்.

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணமெய்திய இணுவில் மேற்கு கணபதிப்பிள்ளை செல்லத்துரையின் மரண சாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன) நியாயாதிக்கம்) சி/87

கணபதிப்பிள்ளை செல்லத்துரை கைம்பெண் பாக்கியம், இணுவில் மேற்கு

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1980 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் நாளன்று, அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1981 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆம் நாள்.

நீதிமன்றக்கட்டளைப்படி
க. வ. கணேசன்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.

க. வைரவநாதன்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி 0448

# தங்கைக்குத் திருமணப்; அண்ணன் தற்கொலை!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தெற்கு சிவன் கோவிலடியைச் சேர்ந்த பாலசிங்கம் இராசசேகரம் (வயது 23) என்ற கார்ச்சாரதி தமது சகோதரி தமது விருப்பத்திற்கு மாறாக திருமணப்பதிவு செய்து கொண்டமையால் விரக்தியுற்று நச்சுத்திரவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

சாவகச்சேரி திடீர் மரண பிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் விசாரணை செய்தார். தாயார் பொன்னையா யோகம்மா, சகோதரி யோகேஸ்வரி நவரட்ணராசா ஆகியோரின் சாட்சியங்களைப் பதிவு செய்த பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [ச]

## தனியார் தபால் நிலையங்கள்

(கொழும்பு)

தனியார் (ஏஜன்சி) தபால் நிலையங்கள் நாட்டின் சகல நகரப் பகுதிகளிலும் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதலாவது தனியார் தபால் நிலையம் இன்று பொரளை "சுப்பர் மார்க்கெட்"டில் திறந்து வைக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் கொள்ளுப்பிட்டி, கிராண்ட்பாஸ், ஹல்ஸ்டோர்ப் ஆகிய இடங்களில் மேலும் நாலு தனியார் தபால் நிலையங்கள் திறக்கப் படவிருக்கிறது. [த]

## பிரயாணிகளுக்கு தொல்லை

[மன்னார்]

இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகள் தம் வசம் வைத்திருக்கும் ரயில் டிக்கட்டுகளில் இலக்கமிட்டு சீலிடவும் இருவருக்கு 50 ரூபா முதல் 100 ரூபா வரை லஞ்சம் பெறப்படுகிறதாம்.

தலைமன்னார் துறைமுக ரயில் நிலையத்திலேயே இவ்வாறு நடைபெறுவதாக பிரயாணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இத்துடன் இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகள் தலைமன்னார் துறைமுக ரயில் நிலையத்திலிருந்து கப்பலேறும் வரை சகலருக்கும் பணம் கொடுக்கவேண்டியிருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

## கடத்தல் முறியடிப்பு

[மன்னார்]

இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்படவிருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 சைக்கிள்களை மன்னார் பொலிசார் கைப்பற்றினர்.

இரகசிய தகவல் ஒன்றின்படித் தலைமன்னார் கிராமத்தில் உள்ள வீடொன்றைச் சோதனையிட்ட சப் இன்ஸ்பெக்டர் ஜோசப், சார்ஜன்ட் பிள்ளை ஆகியோர் கடத்தப்படவிருந்த 10 சைக்கிள்களை கைப்பற்றியதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

## சம்பள உயர்வு கிடைக்கும்

(கொழும்பு)

பொலிசாருக்கும் முப்படையினருக்கும் சம்பள உயர்வு வழங்கவேண்டுமென்ற சபநிக்கா கமிஷனின் சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தருக்கும் ஆயுதப்படையினருக்கும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் சம்பள உயர்வு வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் விசேஷ சேவையில் ஈடுபடும் பொலிசாருக்கு விசேஷ படி வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

## உணவுப் பொருள்களுக்கு மானியம்

[கொழும்பு]

அத்தியாவசிய உணவுப் பொருள்களான சீனி, கோதுமை, சுக்கிலிறை, கிட்டத்தட்ட ஆகியவற்றின் விலைகள் உலக சந்தையில் விலைக்கு ஏற்ப உயருவதைத் தடுப்பதற்கு இலங்கை மானியத் திட்டங்கள் அமுல் செய்யப் படவுள்ளன எனத் தெரியவருகிறது [த]

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபன உற்பத்திகள்
ஒட்டுப்பலகைக் கதவுகள்
கிடைக்குமிடம்;
இப்ராஹிம் ஜபர்ஜி
218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 409
தலைமை அலுவலகம்:
148, ஆர்மர் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி; 23857 ...... 27670 (0432)

## தேவை

முழுநேர அல்லது பகுதிநேர வேலைக்கு ஒரு பெரும் ஸ்தாபனத்திற்கு எமது சங்கமூலம் தொழில்நுட்ப அனுபவம் நிறைந்த பின்வரும் தொழிலாளர்கள் நேரில் எம்முடன் 01-08-81-க்கு முன் தொடர்புகொள்ளவும். அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

I. தொழில்நுட்ப அலுவலர்கள் (Mechanical and Electrical)
II. ஓட்டுனர்கள் (Welders)
III. பொருத்துனர்கள் (Mechanical and Electrical Fitters)
IV. தச்சுவேலையாளர்கள் (Carpenters)
V. கூலியாளர்கள் (Labourers)

சு. ஸ்ரீபாஸ்கரன்
தலைவர்
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம். 0439



யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபை முதலாவது கூட்டத்தைச் சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, சபை செயலாளர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் குத்துவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்துவைப்பதையும், எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்திக்கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

# ராஜஸ்தானில் வெள்ளம் 1000 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 26 இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தினால் இதுவரை ஆயிரத்திற்குமதிகமானோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 200 கிராமங்கள் இவ்வெள்ளத்தினால் நீரில் மூழ்கியுள்ளன. பீகார், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. பல குடும்பங்களும் இதனால் வீடுகளை இழந்துள்ளன.

வெள்ள நிவாரணப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். [வெ]

# ஈரானின் ஜனாதிபதி தேர்தல்: அலிரஜாய் வெற்றி!

தெஹ்ரான், ஜூலை 26 ஈரானின் ஜனாதிபதி தேர்தலில் பிரதம மந்திரி ஜனாப் முகமத் அலிரஜாய் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

இவ்ஜனாதிபதி தேர்தலில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின் படி அலிரஜாய்க்கு 95 லட்சத்து 85,600 வாக்குகள் கிடைத்துள்ளது. இவருடன் போட்டியிட்ட அடுத்த வேட்பாளருக்கு 3 லட்சத்து 78 000 வாக்குகள் கிடைத்துள்ளது.

ஈரானிலுள்ள 270 தேர்தல் தொகுதிகளிலுமுள்ள வாக்குச் சாவடிகளில் காவல் புரிந்து வந்தவர்களில் 12 இஸ்லாமிய காவல்படை வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிய வருகிறது.

ஈரானின் கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாப் அபுல் ஹாசன் பானி சதார் ஒரு கோடிக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார். ஈரானின் மொத்த வாக்காளர் தொகை 2 கோடி 40 லட்சமாகும்.

இத்தேர்தலையொட்டி ஈரானின் புரட்சிக் காவல்படையினருக்கும், பொதுமக்களுக்கு மிடையே இடம்பெற்ற மோதலில் பலர் பலியானார்கள். [வெ]

## அத்துமீறிக் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை, கொழும்புத்துறை மணியன் தோட்டம் ஆகிய இரு இடங்களில் அத்துமீறிக் குடியேறியிருப்பவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் காணித்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

உணவு முத்திரை உள்ளவர்களுக்கும், காணியற்றவர்களுக்குமே மேற்குறிப்பிட்ட இடங்களில் காணி வழங்கப்படும் என யாழ். மாவட்ட காணி அதிகாரி திரு. க. சம்பந்தர் தெரிவித்துள்ளார். (மா)

## இ. ஆ. சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளையின் புதிய நிர்வாகிகள் வருமாறு :-

தலைவர் மு. தியாகராசா, உபதலைவர்கள் பண்டிதர் இ. கிருஷ்ணபிள்ளை, வே. சிவராசா, பொதுச் செயலாளர் இ. தருமலிங்கம் அமைப்புச் செயலாளர் அ. தவபாலன் சேவைச் செயலாளர் சே வேலாயுதபிள்ளை உபசெயலாளர்கள் எஸ். கே. ரகுநாதன், ரி. புவனசுந்தரராசா, பொருளாளர் தி. தர்மலிங்கம், ஆறு பேர் நிர்வாகசபை உறுப்பினர் மூவர் செயற்குழு உறுப்பினர்.

தலைவர், பொதுச்செயலாளர்களாக, வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களே, போட்டியின்றி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர். (மா)

## துப்பாக்கி, ரிவோல்வர் வைத்திருக்க தடை

சென்னை, ஜூலை 26 ராமநாதபுரம் மாவட்டத்தில் துப்பாக்கி, பிஸ்டல், ரிவோல்வர் ஆகிய ஆயுதங்களை பொதுமக்கள் வைத்திருக்க தமிழ் நாடு அரசு தடைவிதித்துள்ளது [வெ]

## மூவர் பலி!

சென்னை, ஜூலை 26 சேலத்தில் இடம்பெற்ற லொறி விபத்தொன்றில் மூன்று பேர் பலியானார்கள். பஸ் ஒன்றை விலத்திச்செல்ல முற்பட்டபோதே இவ்லொறி விபத்துக்குள்ளானது. (வெ)

# தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க உத்தரவு

(பண்டத்தரிப்பு)

இளைப்பாறிய புகையிரதப் பாதை பாதுகாவலர் ஒருவரை கொலைசெய்து கிணற்றில் போட்டதாகவும் பொய் உறுதி எழுதியதாகவும் குற்றம் சாட்டி ஆனைக்கோட்டை பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெண் உட்பட நான்கு சந்தேகநபர்களையும் மீண்டும் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது நீதிபதி திரு ரி யோகநாதன் அவர்களைத் தொடர்ந்து அடுத்தமாதம் 4ம் திகதி வரை நிமாண்டில்வைக்குமாறு உத்தரவிட்டார்.

கொக்குவில் மேற்கு வாசியான புகையிரதப் பகுதியில் இளைப்பாறிய பாதுகாவலர் எஸ்ஸன் சுவாமிநாதன் கொலை செய்யப்பட்டு கிணறு ஒன்றில் பிரேதமாகக் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். கொலைசெய்யப்பட்டவரின் வளர்ப்பு மகளான ஞானம் பிரகா சுப்பிரமணியம், அவரது கணவன் செல்லையா சுப்பிரமணியம், வைரமுத்து இராசதுரை, ஆசைப்பிள்ளை நாகராசா ஆகியோரே இவ்வாறு சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்களாவர் இவர்கள் யாழ்நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு நிமாண்டிலவைக்கப்பட்டிருந்தனர். கடந்த தவணையின்போது மீண்டும் இவர்களை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது நீதிபதி திரு ரி. யோகநாதன் நான்கு பேரையும் தொடர்ந்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பொலிஸ்தரப்பில் ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு தில்லைநாதன் ஆஜரானார். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர் தம்பிராஜநாதன் ஆகியோர் ஆஜரானார்கள். இ விசுவநாதன் ஆகியோர் ஆஜரானார்கள்.

## வட். கல்வி அதிகாரி பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலையில் இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்சயன் "இப்பாடசாலையில் முதல் முதலாக நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டி பெரும் கல்லூரிகளின் விளையாட்டுப் போட்டிகளை ஒத்திருந்தது. இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கான நல்லதொரு எடுத்துக்காட்டு" என்று குறிப்பிட்டார்.

கலைமகள் இல்லம் முதலிடத்தைப் பெற்று ஸ்தாபகர் சின்னையாபிள்ளை நினைவுக்கேடயத்தைப்பெற்றது. திருமதி தனஞ்சயன் பரிசில்களை வழங்கினார். (ம)

# எமது பிரதேசத்தை காக்க அபி. சபைகளை ஏற்றோம்

## மா.அ. சபை உறுப்பினர் 'பூவர்'

[யாழ்ப்பாணம்]

"எமது பிரதேசத்தின் எல்லைகளைக் காப்பாற்றுவதற்காகவே மாவட்ட அபிவிருத்தி சபைகளை நாம் ஏற்றோம். சபை இயங்கத் தொடங்கிய தும் வன்னி மாவட்டத்தில் விவசாயக் கழகங்களை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்."

மேற்கண்டவாறு யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம் பண்ணாகம் இளம் விவசாயிகள் சங்க ஆண்டுவிழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- "விவசாயக் கழகங்களில் அங்கத்தவராக இளைஞர்கள் சேர்ந்து விவசாயம், கால்நடை வளர்ப்பு கோழி வளர்ப்பு முதலியவற்றில் ஈடுபட்டால் பெருந்தொகையான பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதோடு. எமது பிரதேசத்தின் எல்லைகளையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

"இளைஞர்கள் வெளிநாட்டு மோகத்தைக் கைவிட்டு, உள்நாட்டிலேயே விவசாயம், கைத்தொழில் போன்ற சுயதொழில்களில் ஈடுபடமுன்வர வேண்டும். இதன் மூலமே எமது தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.

"தமிழ் மக்களை தன்மானத்தோடு வாழவைக்க, தமிழ் ஈழத்தின் எல்லைகளைக் காப்பாற்ற வன்னி மாவட்டத்தில் நாம் மேற்கொள்ளவுள்ள விவசாயத் திட்டங்களில் சேர்ந்து உழைக்க இளைஞர்கள் பின்நிற்கக் கூடாது" என்றார்.

இவ்விழாவில் பண்டிதர் ப. இராசகுரு உட்படப் பலர் உரையாற்றினர். [வெ]

# "ஆலயங்களில் சினிமா பாடல்களை தடை செய்க!"

## யாழ். மா. ச. தலைவருக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்துக்குட்பட்ட இந்து ஆலயங்களில் நடைபெறுகின்ற உற்சவகாலங்களில் ஆபாசமான சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பப்படுவதை தடை செய்யுமாறு யாழ். மாவட்ட சபைத் தலைவருக்கு அறவழிப் போராட்டக் குழு மகஜர் அனுப்பி வைத்துள்ளது.

ஆபாசப் பாடல்கள் ஒலிபரப்புவதற்குப்பதிலாக பக்திப் பாடல்கள் ஒலிபரப்பப்படுவதால் ஆலயங்களில் அமைதி பேணிப் பாதுகாக்கப்படுவதுடன், அடியார்களுக்கு குந்தகம் ஏற்படாமலும் தடுக்க முடியும் என்றும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (மா)

# கோப்பாய் எம். பி.க்கு சிறப்பான வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் எம். பி யாக பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்த பின்பு ரயில் மார்க்கமாக வந்த திரு. எம். ஆலாலசுந்தரத்துக்கு யாழ் புகையிரத நிலையத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப் பட்டது

யாழ். ரயில் நிலையத்தில் யாழ் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன், யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன், உதவி முதல்வர் திரு. எஸ், சேவியர், யாழ் பலநோக்கு கூட்டுறவுச்சங்க உபதலைவர் திரு. ரி எவ், அருளானந்தம், பொதுமுகாமையாளர். திரு. ஆர். யேசுதாசன் மற்றும் யாழ். ப. நோ. கூ. ச இயக்குநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், யாழ் மாவட்டசபை உறுப்பினர்கள் திரு. சி. நாகராசா, திரு. க. சின்னத்துரை ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர்.

வரவேற்பின்பின்பு ப நோ. கூ. ச. உபதலைவர் திரு. எம். அருளானந்தம் தலைமையில் வரவேற்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

திரு. ஆலாலசுந்தரம் ப. நோ. கூ. ச தலைவராயிருந்தது ஊழியர் பிரச்சினையில் சுமுகமாகவும் நிதானமாகவும் கிடைத்த பொறுப்பை கண்ணியமாகவும் நடந்து கொண்டார் எனப் பாராட்டிய உபதலைவர் திரு ஆலாலசுந்தரம் பாராளுமன்றத்தில் தமது கன்னிப்பேச்சை நிகழ்த்தாதது துரதிஷ்டமானது எனக் கவலை தெரிவித்தார்.

கோப்பாய் எம். பி யும். யாழ். ப நோ. கூ. சங்கத்தலைவருமான திரு. எம். ஆலாலசுந்தரம் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் "காரியவாதி" என்ற முறையில்லல ஒரு கூட்டுறவாளன் என்ற முறையில் சேவை செய்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது யாழ். ப. நோ. கூ. ச இளைஞர்கள்தான் மக்களின் உணவுப் பிரச்சினைக்கு கை கொடுத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். ப. நோ. கூ. ச பொதுமுகாமையாளர் திரு. ஆர். யேசுதாசன் நன்றி கூறினார்.

இவ்வரவேற்பில் திருமதி ஆலாலசுந்தரமும் கலந்து கொண்டார். (மா-உ)

## இளைஞர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தான் என மனதிற்குப்பட்டது. எந்த நாட்டை எடுத்துப்பார்த்தாலும் பயங்கரவாதமும் பலாத்காரமும் தாண்டவமாடுவதைக் காணலாம். ஆனால் உய்யத்தான் வழியைக் காணோமே!

பயங்கரவாத இயக்கங்களில் ஈடுபடுபவர் பெரும்பாலோர் இளைஞர்களே. அவர்களிடையே விரக்தி மனப்பான்மை நிலவுகின்றது. வேலை வாய்ப்பின்மையால். தமது திறமைகளைப் பயன்படுத்த வாய்ப்பின்மையால், அடக்கு முறைகளால் இந்த இளைஞர்கள் சமுதாயத்தின் எதிரிகளாக மாறிவிட்டனர். எனவே இளைஞர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சமுதாயம் முனையவேண்டும். சமய நிறுவனங்களும், அரசியல் சார்பற்ற நிறுவனங்களும் இந்த முயற்சியில் உதவலாம் என நினைக்கிறேன். இளைஞர் 'கிளினிக்'குகள் அவர்கள் நிறுவிளுல் நிபுணர்களின் ஆலோசனையுடன் இந்த இளைஞர்களை செம்மையாக நாம் வழிநடத்தமுடியும்.

இறுதியாக ஒன்று பயங்கரவாதத்தை அரசாங்கங்கள் ஒழித்தொழிக்க முற்படும் போது அரச பயங்கரவாதம் விஸ்வரூபமெடுக்கின்றது. இது பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

கே. தங்கராசா
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிபர்)
கொக்குவில்.

யாழ் நகரில்
தமிழ், சிங்கள படங்களை
தொலைக்காட்சியில் விரைவில்
பார்க்கலாம்.

ஏரியல் போடத் தேவையான
ஜி. ஐ. பைப்புகளுக்கு

ரம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.

## இளைஞரின்சடலம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் தனியார் கடையொன்றுக்கு முன்பாக இறந்து கிடந்த இளைஞர் ஒருவரின் சடலம் யாழ்ப்பாணம் பொலிசாரால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 25-30 வயது மதிக்கத்தக்க பொது நிறமுள்ள இவ் இளைஞர் நீலநிறசட்டையும் பல நிறங்கள் கொண்ட கட்டம்போட்ட சாரமும் அணிந்துள்ளார்.

எம்மிடம்......
உள்ளூர், வெளியூர்

காப்பற் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்........
மெழுகுசீலை வகைகள்

இன்னும் பல பொருட்கள்
நியாய விலையில் கிடைக்கும்.

H. ESMAILJEE & Co

71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

## அப்புத்துரை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் மரணவிசாரணை நடத்தினார். இச்சம்பவத்தில், தன் மனைவி, தாயார், மகன், மகள், மருமகன், மற்றொரு மகன் ஆகியோர் மரணமடைந்ததாகவும் நாராயணசாமி, மரணவிசாரணையில் தெரிவித்தார்.

கந்தையா நாராயணசாமி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

### சனிக்கிழமை இரவு...

"25ம் திகதி சனிக்கிழமை இரவு எனது வீட்டிலுள்ள ஓலைக்கொட்டிலில் வலதுபக்க அறைக்குள் நானும், இறந்த எனது மகன் சாந்தேஸ்வரனும், மகள் காஞ்சனாதேவியும் நித்திரைசெய்துகொண்டிருந்தோம். என் மருமகன் யோகானந்தன், முன்அறையில் உள்ள கட்டிலில் படுத்திருந்தார். எனது மகள் ஜெயநாயகவதி அதே அறையில், கட்டிலின் பக்கத்தில் நிலத்தில் படுத்திருந்தார். எனது தாயார் அழகம்மா மனைவி அழகம்மா ஆகியோர் முன்அறை வாசல் பக்கத்தில் நிலத்தில் படுத்திருந்தார்கள். முன்நுழைவாயிலில் கதவு இல்லை. வழக்கம்போல் முன் அறையில் ஒரு அரிக்கன் லாம்பும், வலதுபக்க அறையில் இன்னொரு அரிக்கன் லாம்பும் எரிந்துகொண்டிருந்தன. எனது 3வது மகன் கருணேஸ்வரன், தனது சிறிய தாயாராகிய ரோகிணிஅம்மா வீட்டில் வழக்கம்போல் படுத்திருந்தார்.

"நாங்கள் இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு குறிப்பிட்ட அறைக்கு நித்திரைக்கு போனோம். படுத்திருந்த போது லாம்பு இரண்டும் எரிந்துகொண்டிருந்தன.

"நள்ளிரவு பன்னிரண்டு மணிபோல் என் 3வது மகன் படுத்திருந்த ரோகிணி அம்மா வீட்டில் வெடிச்சத்தம் கேட்டது அதே சமயம் எனது மகள் காஞ்சனாதேவி வெடிச்சத்தம் கேட்டதாக கூறி என்னை எழுப்பினாள்.

### மீண்டும் வெடிச்சத்தம்

"எழும்பியிருந்தபோது வீட்டின் முன்படலையில் மீண்டும் வெடிச்சத்தம் கேட்டது. அதேசமயம் தகரப்படலை பெரிய சத்தத்துடன் விழுந்தது. நான்முன்அறைக்கு வந்தேன். படுத்திருந்த எல்லோரும் எழும்பிவிட்டார்கள் அப்பொழுது லாம்பு இரண்டும் எரிந்த நிலையில் இருந்தன.

"அப்பொழுது இராசதுரை அப்புத்துரை என்பவர் நீண்ட குழாயுடைய துவக்கை ஏந்திய வண்ணமும் இராசதுரை இலராசாவும் கையில் துவக்குடன் எனது வீட்டில் புகுந்தனர். உடனே அப்புத்துரை நீண்ட துவக்கால் எனது மனைவியை ஒருதரம் சுட்டார். மனைவி உடனே விழுந்துவிட்டாள். அதேசமயம் மகேந்திரன், தில்லைநடராசா, தங்கராசா ஆகியோர் எனது வீட்டு முன் வாசலுக்கு வந்ததைக் கண்டேன். நான் பயந்து வீட்டுக்குப் பிற்பக்கமாகவுள்ள தட்டியைக் கிளப்பிக்கொண்டு வெளியே ஓடினேன்.

### ஆறு வெடிச்சத்தம் கேட்டது

நான் ஓடும்போது வீட்டுக்குள் ஆறு வெடிச்சத்தங்கள் கேட்டன. பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆட்கள் சத்தம் போட்டுக் குளறிய சத்தமும் கேட்டது. நான் பயத்தில் ஓடிவிட்டேன்.

"பொலிசார் விசாரணைக்கு வந்துவிட்டார்கள் என்று அறிந்ததும் எனது வீட்டுக்கு வந்தேன். வீட்டுக்கு வந்து பார்த்தபோது எனது தாய், மனைவி, மகன், மருமகன், மகள் ஆகியோர் வெடிகாயங்களுடன் இறந்து கிடந்தனர்.

"ரோகிணி அம்மா வீட்டுக்குச் சென்று எனது மகனைப் பார்க்கப் போனபோது அவரும் வெடிகாயத்துடன் இறந்து கிடப்பதைக் கண்டேன். இந்த ஆறு சந்தேகநபர்களுக்கும் எங்களுக்கும் பழைய கோபம் உண்டு. இப்பொழுது ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது."

மேல் விசாரணை நாளைக் காலை பருத்தித்துறை நீதி மன்றத்தில் நடைபெறும். (க)

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன்' ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சிகள்- மற்றும் P. M. G. [Radio Officer] பயிற்சி ஆகியன ஆரம்பம் 2-8-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 042₂

## இப்படியும் நடக்கிறது

யாழ். நவீன சந்தையிலுள்ள ஒரு கடைக்குள் 'சிவில்' உடை அணிந்த இருவர் சில தினங்களுக்கு முன்னர் திடுதிப்பென நுழைந்து—

ஒரு குறிப்பிட்ட பொருளைச்சுட்டிக்காட்டி, விலை கேட்டனர். பாஷைபுரியாத விற்பனையாளர், ஆங்கிலத்தில் பதிலளிக்கின்றார்.

'சிவில்' உடையிலிருந்தவர்களுக்கு 'பொத்' என்று கோபம் வந்துவிட்டது!

'உத்தியோக பாஷை'யில் ஏன் பதில் சொல்லவில்லை என்று அந்த இருவரும் அதட்டிக் கேட்டார்களாம். இந்த நிலையில்......

விற்பனையாளருடன் நடைபெற்றுக்கொண்டிருந்த 'மோதலை' அவதானித்துக்கொண்டிருந்த பொறுப்பதிகாரி ராஜ நடையில் சென்று 'சிவில் உடையாளர்'களை மிகவும் நெருக்கமாக அணுகி; அவர்கள் பேசிய மொழியிலேயே நல்ல 'விருந்து' கொடுத்தாராம்! இந்த விருந்து அந்த இருவருமே எதிர்பாராத பெருவிருந்தாம்! இதன் எதிரொலியாக 'பேச்சு மூச்சு' இல்லாமலே அந்த இருவரும் நழுவி விட்டனராம்! இது ஆயிரத்தில் ஒரு துணிச்சல்!

— ஊடுருவி

## துப்பாக்கி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. கே. எஸ். மகேசன் ஸ்தலத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணையை நடத்தினார்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு திருச்சிற்றம்பலம் தலைமையில் வல்வெட்டித்துறைபொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

சந்திகை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் லலித்குமார், 6 சடலங்களினதும் பிரேத பரிசோதனையை நேற்று நடத்தினார். [க]

### சம்பவம் நடைபெற்ற இடத்தில்...

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட நமது புலோலி நிருபர் தெரிவிப்பதாவது;

உடுப்பிட்டி, கம்பர்மலை, அத்தியடி குறிச்சியைச் சேர்ந்த கந்தையா நாராயணசாமியின் வீட்டுக்குச் சென்றபோது... வாசலில் நடுத்தர வயதுப் பெண்மணி முகம்குப்புற காயங்களுடன் இறந்துகிடந்தார்.

வீட்டுக்குள் சென்றபொழுது இன்னொரு வயோதிப் பெண்மணி காயத்துடன் சுருண்டநிலையில் இறந்துகிடந்தார்.

வீட்டு அறைவாசலில் ஒரு பையனின் பிரேதம் முகம் குப்புறக் கிடந்தது. இதற்கு அருகாமையில் நடுத்தரப்வயதுபெண்ணின் பிரேதம் அண்ணாந்தபடி கிடந்தது.

அதேஅறையின் வலது பக்கமாக இருக்கும் மேசையின் கீழ் ஒரு நடுத்தரவயது ஆணின் சடலம் கிடந்தது.

வீட்டுக்குக் கிழக்குப்பக்கமாக உள்ள ரோகிணிஅம்மாவின் வீட்டில் ஒரு இளம் ஆணின் சடலம் அண்ணாந்தநிலையில் கிடந்தது.

விசாரணையின் போது. நாராயணசாமி என்பவர் தனது வீட்டின் வாசலில் கிடந்த முதலாவது பிரேதம் தனது மனைவி அழகம்மாவின் சடலம் என்றும் அதற்குப் பக்கத்தில் கிடக்கும் பிரேதம் தனது தாய் கந்தையா அழகம்மாவின் பிரேதம் என்றும், அறை வாசலில் முகம் குப்புறக் கிடந்த சடலம் தனது மகன் சாந்தேஸ்வரனின் சடலம் என்றும், அதற்குப் பக்கத்தில் காணப்படு நடுத்தரவயதுப் பெண்ணின் சடலம் தனது மகள் ஜெயநாயகவதியின் சடலம் என்றும் மேசைக்கு கீழே உள்ள சடலம் தனது மருமகன் யோகானந்தனின் சடலம் என்றும் அடையாளம் காட்டினார்.

ரோகிணி அம்மாவின் வீட்டிற்குள் கிடந்த சடலம் தனது இன்னொரு மகன் கருணேஸ்வரனின் சடலம் என்றும் அடையாளம் காட்டினார்.

## மன்னாருக்கு 100 பொலிஸார்

[மன்னார்]

மன்னாருக்கு மேலும் 100 பொலிசார் இடமாற்றலாகி வந்துள்ளனர். இவர்கள் இம்மாதம் முதல் மன்னாரில் கடமையாற்றுகின்றனர்.

இவர்களில் ஒருவரேனும் தமிழ் முஸ்லிம் பொலிசார் இல்லை.

## இன்று வரவேற்பு

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதி தமிழ் இளைஞர்பேரவை; யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்துவுக்கு இன்று பொது வரவேற்பொன்று அளிக்கிறது.

திரு. மு. ஈழத்தமிழ்மணி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், கூட்டணிச்செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் எம்.பீக்களான திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன் எம். ஆலாலசுந்தரம், த.ராஜலிங்கம், வி. என். நவரத்தினம் வி. தர்மலிங்கம் யாழ். மேயர் ஆர். இராஜவிசுவநாதன், வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் திரு. எம். வேலும்மயிலும் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

மிகவும் குறைந்த
விமானக் கட்டணத்தில்

- மத்தியகிழக்கு ❖ சிங்கப்பூர்
- பாரிஸ் ❖ நைஜீரியா
- லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி)
  ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்
உலகின் எப்பாகத்துக்கும்

- எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

விமான டிக்கட்டுகள்

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றை கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள, பிரபல்யமான
MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன்
ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான
எங்களை நாடுங்கள்

மக்கினொன்ஸ் ட்றவல்
சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 603ம் இலக்கத்திலுள்ள சலாதகைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SriLanka
Regd No. QB 100286/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126